

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 16.09.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண் 29 க்குட்பட்ட அண்ணா நகர், அக்பர் தெரு ஆகிய பகுதிகளுக்கு மாநகராட்சி மைதானத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி,கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களுக்கான முரசொலி சுற்றுப்பயண ஆய்வாளர் அ. பால்ராஜ் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், திருச்சி மத்திய மாநகர செயலாளர் மேயர் மு.அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. என்.சேகரன், திருச்சி கிழக்கு மாநகர செயலாளர் கோட்டை தலைவர் மதிவாணன், கவுன்சிலர் ஓ. நீலமேகம், பகுதி செயலாளர் கே. என்.எஸ். சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

### வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற –பறைசாற்றுகின்ற வகையில்

# சென்னையில் சிலை நிறுவி சிறப்புச் சேர்த்த முதல்வருக்கு நன்றி!

## சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் அறிக்கை!

**சென்னை, செப். 21 -**

**“வீரமங்கை ராணி வேலு நாச்சியார் புகழைப் போற்றுகின்ற வகையிலும் பறை சாற்றுகின்ற வகையிலும், அவருக்கு சென்னை - கிண்டி யில் திருவுருவச் சிலை நிறுவி, சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி டி.எஸ். கே.மதுராந்தகி நாச்சியார், முதல்வருக்கு எழுதியுள்ள வாழ்த்து மடலில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர், முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய மடல் வருமாறு:

**முதலமைச்சர் அவர்களுக்கு. வணக்கம்,**

தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை நடத்தி வரும் முதலமைச்சர் அவர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்களின் அளப்பறியாப் பங்கு குறித்தும், வீரர்களின் தியாகம் குறித்தும், போராட்டங்கள் குறித்தும், தாய்மொழியான தமிழ்



மொழி குறித்தும், வீரம், காலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பங்கு பெற்ற முன்னோர்களை கௌரவிக்கும் பொருட்டும். இதனை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்திய வரலாற்றில் முதல் பெண்மணியாக சுதந்தி ரத்திற்காக தனித்து நின்று போராடிய வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில் சிவகங்கை மாவட்டத்தில் இவ்வீரப் பெண்மணிக்கு நினைவு மண்டபம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டு, சிறப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் புகழை பறை சாற்றுகின்ற வகையில் தற்போது சென்னை, காந்தி மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் (19.09.2025) திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், பறைசாற்றுகின்ற வகையிலும், சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை சமஸ்தானம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் வழங்கிய மனுவின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி ஆகியோர் வழங்கினார்கள்.




நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், மகளிர் சுய குழவின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். உடன் மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், நகர்மன்ற தலைவர்கள் திருமதி வாணீஸ்வரி, (உதகை), திருமதி சுசீலா (குன்னூர்), திருமதி ஜெயகுமாரி (கோத்தகிரி) உட்பட பலர் உள்ளனர்.

### தி.மு.க. அயலக அணி சார்பில்

# குவைத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

## சிதம்பரம் ந. தியாகராஜன் ஒருங்கிணைப்பில் – புதுவை அ.அறிவுமணி தலைமையில் நடைபெற்றது!

குவைத், செப்.21-

குவைத்தில் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

குவைத் நாட்டில் தி.மு.க., அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழிகாட்டுதலின் படி, தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழகத்தின் சிற்பி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் குடந்தை சி.தியாகராஜன், ஆயங்குடி ஜா.சையது முஸ்தபா, சேகரை வெ. செல்லத்துரை. துணைச்செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கிர், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, ஓட்டுனர் நல அணி செயலாளர் திருச்சி ஏ. ஜே.எம்.இஷாக் ஜக்கரியா, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ. ஷாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசுருதீன் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரஃபீக் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் விழுப்புரம் எஸ். அம்ஜாத்கான், குடந்தை த. மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ராமநாதபுரம் பைசான் அலி, தொண்டரணி செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப் அலி, தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ். செந்தில்குமார், பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள் ஆத்தூர் ஜான் பாஷா, கோட்டை பி.மோதிலால், ஓட்டுனர் நல அணி துணைச் செயலாளர்கள் திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் குடந்தை ஆர். முருகன், மகளிர் அணியை சேர்ந்த அரியலூர் சௌமியா பாஸ்கர், பொறியாளர் பாஸ்கர், இந்திய தூதரகப் பணியாளர் மற்றும் சமூக சேவகர் ஷாஜகான், குவைத் தளபதி பேரவை நிர்வாகிகள், அலி டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் கொடுந்துறை எஸ்.முகமது அலி,

கூட்டணி கட்சிகளான வி.சி.க, ம.தி.மு.க., த.வா.க, த.மு.மு.க., நிர்வாகிகளும், தமிழ் அமைப்பு களான வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம் & அறக்கட்டளை, கலகலப்பு நண்பர்கள் குழு, நந்தவனம், கூடல் நகர் தோழமைக் குழுமம், உதவும் கரங்கள் லைப் ஸ்டைல் தமிழ் வளையொலி மற்றும் சமூக நல அமைப்பு களின் பிரதிநிதிகளும் உறுப்பி னர்களும் பொதுமக்களும் பெரு மளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பேசிய அனைவரும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழினை போற்றினர். மேலும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களால் தமிழன் தலைநிமிர்ந்தான் என்றும்,

போராட்டமே வாழ்வெனக் கொண்டவர் இறுதிவரை போராடி வெற்றி கண்ட போராட்ட நாயகன் என்றும் போற்றி புகழ்ந்தனர். கலைஞரின் வழியில் இன்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் வெகு சிறப்பாக ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும், 2026 ஆம் ஆண்டு நடக்க இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றிபெற கலைஞர் அவர்களின் நினைவு நாளில் சூளுரைப்போம் என உறுதி ஏற்றனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இறுதியில் அமைப்பின் துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது நன்றி கூறினார்.



குவைத் நாட்டில் தி.மு.க., அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந. தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழகத்தின் சிற்பி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

# சரணாலயமாகும் அறிவாலயம்!

ஜனநாயகத்துக்குப் புறம்பாக அ.தி.மு.க.வை
அபகரித்திருக்கும் எடப்பாடியால்
வஞ்சிக்கப்படுவோருக்கு அறிவாலயம் தான்
அன்புச் சரணாலயம்..

முதல்வர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
தி.மு.க.வுக்கு பவளவிழா எடுக்கிறார்..

கூவத்தூர் குத்தகைக்காரரோ
அ.தி.மு.க.வுக்கு பிளவு விழா நடத்துகிறார்.

எப்படியோ

சேயை தாயோடு
இணைக்கும்
சரித்திர சந்தர்ப்பத்தை
எடப்பாடி பேய்
ஏற்படுத்தியிருக்கிறது என்பதே உண்மை…



**மருது அழகுராஜ்**



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கரம்பக்குடி பேரூர் கழக மூத்த முன்னோடி மூர்த்தி அவர்களின் மகன் மூ.மணிகண்டன் – புஷ்பவல்லி ஆகியோரின் கலப்புத் திருமணம் கறம்பக்குடி நகரச் செயலாளரும் பேரூராட்சி தலைவருமான யு.முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் டி.ஆர்.துரைராஜ், மாவட்ட வர்த்தக சங்க துணை செயலாளர் சி.பழனியப்பன்,பேரூர் கழக விவசாய அணி அமைப்பாளர் கவுன்சிலர் நியாஸ், ஹரிபாஸ்கர், பிரபாகரன், செல்வகுமார், வினோத்,பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ராஜு,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்புக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவிப்பு !

சென்னை,செப்.21-

தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்ப ங்களால் முன்மொழிய ப்பட்டுள்ள ‘தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன்’ என்ற தீர்மான ஏற்பு



கூட்டம் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் ஆலோசனைப்படி இன்று (21.09.2025 ஞாயிற்றுக் கிழமை ) மாலை 5 மணி அளவில் தருமபுரி BSNL அலுவலகம் அருகில் மாபெரும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் இள.புகழேந்தி சிறப்புரையாற்றவுள்ளார். அதுசமயம் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA, BLC நிர்வாகிகள் கழக தோழர்கள்,பொது மக்கள் என திரளாக கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று ஆ.மணி எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.